-

## முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

## O.S. No. 249/2014 c/w 304/2020

**Witness DW 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மகாதேவன் | தொழில் | |
| த/பெ | ராமலிங்கம் | வயது | |
| ஊர் | | தேதி | 16.10.2025 |
| மாவட்டம்; | | | |

இன்று (16.10.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

**சத்தியமாக சொல்கிறேன்**

நான் இந்த வழக்கில் 6 வது பிரதிவாதி என்றாலும் 7, 8, 9 ஆகிய பிரதிவாதிகள் எனது சகோதரிகள் என்று சொன்னால் சரி . எனது தாயார் பெயர் பாக்கியவதி . பாக்கியவதி என்பவரது தகப்பனார் பெயர் அங்கப்பன் என்றால் சரி . 1 மற்றும் 2 வது பிரதிவாதிகளான தம்பிதுரை, ராதாகிருஷ்ணன் ஆகியோர் பாக்கியவதி என்பவரது சகோதரிகள் என்றால் சரி. அங்கப்பன், நாராயணன், தனபால் ஆகியோர் சகோதரர்கள் என்றால் சரி. அவர்கள் மூவரின் தகப்பனார் பெயர் முத்துசாமி என்றால் சரி. முத்து சாமி அங்கப்பன், தனபால், நாராயணன் ஆகியோர் கூட்டுக்குடும்பமாக இருந்து வந்தனர் என்றால் சரி. கூட்டுக்குடும்பத்திற்கு பனங்குப்பம் கிராமத்தில் 1 ஏக்கர் 66 செண்ட் நிலம் உள்ளது என்றால் சரி .தொடர்ந்தனூர் கிராமத்தில் 35 செண்ட் நிலம் பொது

குடும்ப சொத்தாக இருந்தது என்றால் சரி . முத்துசாமி என்பவர் இறந்த பிறகு அங்கப்பன் என்பவர் தான் பொது குடும்ப தலைவராக இருந்து சொத்துக்களை கவனித்து வந்தார் என்றால் சரி . அங்கப்பன் , நாராயணன் , தனபால் ஆகியோர் கூட்டுக்குடும்பமாக இருந்து சம்பாதித்து வழக்கு சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளனர் என்று சொன்னால் சரி. ஆனால் கிரைய பத்திரம் எழுதும்போது பொது குடும்ப தலைவர் என்ற முறையில் அங்கப்பன் என்பவர் பெயரில் கிரைய பத்திரங்கள் எழுதப்பட்டது என்று சொன்னால் சரி. குடும்ப சொத்துக்களை பரிவர்த்தனை செய்து பொது சொத்துக்களை வாங்கியுள்ளனர் என்றால் சரி . அங்கப்பன் என்பவர் 1991 ம் வருடம் இறந்துவிட்டார். அவர் இறந்த பிறகு நாராயணன் என்பவர் தான் குடும்பத்தை கவனித்து வந்தார். தனபாலன் என்பவர் 2011 ம் வருடம் இறந்துவிட்டார் என்றால் சரி . தனபால் என்பவரது வாரிசுகள் தான் 3,4,5 பிரதிவாதிகளான வளர்மதி, கமலம் பத்மாவதி என்றால் சரி. தனபாலன் என்பவர் 3 வது வாதியின் பேரில் அவருக்கு சேர வேண்டிய 3 ல் 1 பாக சொத்தினை உயில் வாயிலாக எழுதி வைத்துள்ளார் என்றால் சரி. நாராயணன் என்பவர் 2014 ம் வருடம் இறந்துவிட்டார் என்றால் சரி . அவரது பாக சொத்தினை இரண்டாவது வாதியான தனலட்சுமி என்பவர் அடைய வேண்டும் என்று ஒரு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரி . வழக்கு சொத்துக்கள் பாகம் பிரிக்கப்படாமல் பொது குடும்ப சொத்தாக தான் உள்ளது என்று சொன்னால் சரி . 2 ம் பிரதிவாதி வழக்கு சொத்துக்கள் அனைத்தும் அவருக்கு மட்டுமே உரிமையான சொத்துக்கள் என்று சொல்லியுள்ள விவரம் சரியானதா என்றால் சரியல்ல . 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் சேர்ந்து பாகம் பிரித்துக்கொண்டு 2 ம் பிரதிவாதி அவருக்கு வந்த

பாகத்தை 10 ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் 06.01.2014 ம் தேதியில் எழுதி வைத்ததாக சொல்லியுள்ள விவரம் சரியானதா என்றால் சரியல்ல . அந்த செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது . அங்கப்பன் என்பவரது வாரிசுகள் என்ற முறையில் வழக்கு சொத்தில் எங்களுக்கு (6 முதல் 9 பிரதிவாதிகள்) 9 ல் 1 பாகம் சேர வேண்டும் என்று கோரியுள்ளேன் என்று சொன்னால் சரி . தனலட்சுமி மற்றும்தயாநிதி ஆகியோருக்கு தலா 3 ல் 1 பாகம் சொத்து வழங்க எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-M.S. Varalakshmi)
I Additional Subordinate Judge,
Villupuram